Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 1, 2023

புதன்கிழமை நவம்பர் 01, 2023 | ஒளி: 09 கதிர் 118 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE




## எகிறியது

2024ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதி சேர் வரியை (VAT) தற்போதைய 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# ‘ஐயா’ தமிழரின் ஓர் அடையாளம்

## சி.வி.தெரிவப்பு: அவரின் இடத்துக்கு எவருமில்லை என்கிறார்

■ எஸ் தில்லைநாதன், எம்.றொசாந்த்

சம்பந்தன் வடக்கு , கிழக்கு தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.தெரிவித்துள்ளார்.

கேள்வி - பதில் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவது வழமை. இவ்வாறு திங்கட்கிழமை (30) வெளியிட்ட கேள்வி - பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “பிரச்சினைகள் அப்படியே உள்ளன”



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய பாராளுமன்ற தூதுக்குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனையும்,

தொடர்ச்சி P2

## டயானாவுக்கு எதிரான வழக்குத் தள்ளுபடி



சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களின் பெரும்பான்மை விருப்பத்துடன் நிராகரிக்கப்பட்டுள்ளது.

டயனா கமகே, பிரித்தானிய பிரஜை, ஆகையால் இந்நாட்டு அரசியலமைப்பின் பிரகாரம், அவரை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கோ, அமர்வதற்கு மற்றும் பாராளுமன்றத்தில் வாக்குகளை அளிப்பதற்கோ தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறும் சமூக ஆர்வலரான ஓஷல் ஹேரத் ரிட் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அம்பிட்டிய சுமனரத்தன தேரருக்கு எதிரான:

## தமிழர்களின் தலைகளை கொய்யும் வழக்கு ஒத்திவைப்பு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மங்களராம விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்தன தேரருக்கு எதிராக தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் தாக்குதல் செய்யப்பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை (31) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2



## சுமனரத்தன தேரர் தாயின் கல்லறை உடைக்கப்பட்டதா?

### அழைத்து கேட்குமாறு பிள்ளையானுக்கு மனோ ஆலோசனை

தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, பகிரங்கமாக இனவாத, வன்முறை கருத்துகளை கூறி, மட்டு மாநகரசபை ஆணையாளர் மீது சுமனரத்தன தேரர், குற்றம் சாட்டியுள்ளார். ஆகையால், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்கு, அம்பிட்டிய சுமனரத்தன தேரருக்கு

தொடர்ச்சி P2

## மின் கட்டண திருத்தத்தில் மாற்றம்

### மின்சார அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மின் கட்டண திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதன்படி, ஆறு (06) மாதங்கள் என முன்னர் தீர்மானிக்கப்பட்ட மின் கட்டண மீளாய்வு காலம் தற்போதுள்ள பொதுக் கொள்கை வழிகாட்டுதலின் அடிப்படையில் மூன்று மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “மொட்டு இன்றி அரசாங்கம் மலராது”



பொதுஜன பெரமுன இல்லாமல் தனியாக அரசாங்கமொன்றை உருவாக்கிவிட முடியும் என்று சிலர் கருதுவார்களாக இருந்தால் அது தவறான விடயமாகும்.

தொடர்ச்சி P2

இரண்டில் எதுவானாலும்

## “இருள் நிறைந்த படுகுழி நிச்சயம்”



கடனை மீளச் செலுத்துவது தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்துதல் மற்றும் கடனை மீளச் செலுத்துதல் ஆகிய இரு விடயங்களில் எதனை தேர்ந்தெடுத்தாலும் இந்த நாடு அடுத்த வருடம் இருள் நிறைந்த படுகுழியில் தள்ளப்படும் என்பது நிச்சியமாகுமாகும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஐம்பொன் சிலை மீட்பு: கடத்தியவர் தப்பினார்

■ புகழிந்தன்

வவுனியாவில் இருந்து திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்ட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐம்பொன் சிலையொன்று பொலிஸாரினால் திங்கட்கிழமை (30) கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த சிலையின் எடை 35 கிலோ கிராம் என தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## “பிற்போக்கான வரி அதிகரிப்பு”

### வருடத்திற்கு இரண்டு முறை மட்டுமே விலை திருத்தம் செய்ய முடியும்



பெறுமதி சேர் வரியை 18 சதவீதமாக அதிகரிப்பது வரி சூத்திரத்தை குழப்பியடிக்கும் என்றும், பிற்போக்கான வரி அதிகரிப்பில் இந்நாட்டின் சாதாரண வறிய மக்களும்,உழைக்கும் மக்களும் பெரும் வரிச்சுமைக்கு ஆளாவார்கள் என்றும், அரசாங்கத்தின் பலவீனம்,வினைத்திறன் இன்மை மற்றும் மோசமான அரச நிர்வாகச் செயற்பாடுகள் அரசாங்கத்தின் இத்தகைய தீர்மானங்களில் வெளிப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## குரங்குகளுக்கு ‘லூப் கருத்தடை’

குரங்குகளின் கர்ப்பத்தைத் தடுப்பதற்காக ‘லூப் கருத்தடை’ எனப்படும் கருப்பையக சாதனத்தை (IUD) அறிமுகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக கால்நடை மருத்துவ அறிவியல் துறை பேராசிரியர் அசோக தங்கொல்ல தெரிவித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவப் பிரிவும் பேராதனை போதனா வைத்தியசாலையும் இணைந்தே இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக அவர் அறிவித்தார்.

IUD என்பது T-வடிவ பிளாஸ்டிக் துண்டு ஆகும், இது கர்ப்பத்தைத் தடுக்க கருப்பையில் வைக்கப்படுகிறது. பெண் குரங்குகளுக்குள் IUD ஐச் செருகுவதற்கான சாத்தியமான வழியைக் கண்டறிய ஒரு சோதனை நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பாதி சிகரெட் புகைத்த பி.சி மயங்கினார்



பாதி சிகரெட்டை புகைத்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், தன்னிடமிருந்த பெறுமதியான பொருட்களை இழந்த சம்பவமொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, பெஸ்டியன் மாவத்தையில் உள்ள பொதுக் கழிவறைக்கு வந்த பொலிஸ் கான்ஸ்டபிள், இனந்தெரியாத ஒருவர் கொடுத்த பாதி புகைத்த சிகரெட்டை புகைத்துவிட்டு போதையில் கவிழ்ந்துவிட்டார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘ஐயா’ தமிழரின் ஓர் அடையாளம்

இதன் முழு விவரம் வருமாறு, கேள்வி -சம்பந்தன் பதவி விலகல் சம்பந்தமான விடயத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்? பதில் - அவர் தாம் பதவி விலகத் தேவையில்லை என்று கூறியுள்ளார். அவரைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தனின் பாராளுமன்றக் காலம் 2025 வரை என்று இருந்தாலும் பாராளுமன்றம் அதற்கு முன்னர் கலைக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

வடக்கு, கிழக்குத் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் தமது குரலையும் உடலையும் வெளிக்காட்டுவது தான் அவர்களின் கடமை என்று நினைப்பது தவறு. தமிழ் மக்களின் வருங்காலம் பாராளுமன்றத்தால் அதன் பெரும்பான்மை அங்கத்தவர்களின் விருப்புடன் சுமுகமாக நிர்ணயிக்கப்படப் போவதில்லை. ஊரறிய உலகறிய எமது அவலங்களை வெளிநாட்டு அரசாங்கங்களுக்குத் தெரியப்படுத்தி, இலங்கை சம்பந்தமான பொதுக் கருத்தை வெளிநாடுகளில் எமது புலம்பெயர் சகோதரர் வாயிலாக எழ வைத்து எமது நாட்டின் அரசாங்கத்துக்கு போதிய நெருக்குதல்களை ஏற்படுத்தினால்தான் ஏதாவது நடக்கும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பாரப்படுத்தினால் எமக்கு நன்மைகள் கிடைக்கலாம். அப்போதுகூட சீனாவிடம் முழுமையாக சரணாகதி அடைய சிங்கள அரசியல்வாதிகள் ஆயத்தமாக உள்ளார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலும் பார்க்க எவரிடமும் நாம் மண்டியிடத் தயார் என்பதே அவர்களின் மனோநிலை.

இந்த விதத்தில் தமிழ் மக்களின் தற்போதைய நிலையை அறிய அவர்களின் இதுவரை கால அவலங்களை அறிய, அவர்களின் அபிலாஷைகளை அறிய வெளிநாட்டுத் தூதுவர் அகங்கள் நாடும் முக்கிய நபர் சம்பந்தனே. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்கூட அண்மையில் அவரின் வாசஸ்தலம் சென்று அவரை சந்தித்தார். அவர் பேசுவது விளங்காவிட்டாலும் பக்கத்தில் இருந்து அவற்றை அவர்களுக்கு விளங்கப்படுத்த சுமந்திரன் போன்றவர்கள் முன்வரவேண்டும்.

அவரைப் புறக்கணிக்கவோ நீக்கவோ நடவடிக்கை எடுக்காமல் அவரின் பங்கை தமிழ் மக்களுக்கு நன்மை பயப்பதாக மாற்றுவதே - அவரின் பெயரைச் சொல்லி இதுவரை காலமும் அரசியல் நடத்தியோரின் கடமையாகும். வெளி உலகம் சம்பந்தனை ஒரு பக்கச்சார்பற்ற ஒரு நம்பகமான தமிழ் தலைவராக நினைக்கின்றது. அவரைப் புறக்கணிக்கவோ நீக்கவோ முனைவது தமிழ் மக்களுக்கு இடையூறை விளைவிக்கும். அவர் வட, கிழக்குத் தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை.

அவரில் பல குறைகள் இருந்துள்ளன - இருக்கின்றன. ஆனால், யாரிடந்தான் குறைகள் இல்லை? அதுவும் தமிழர்கள் மத்தியில் ஒரு தமிழர் பற்றி இன்னொரு தமிழரிடம் கேட்டால் யாரும் நினையாத குறைகள் எல்லாம் நிறைந்தோடி வெளிவந்து விடுவன. இதனால்தான் நான் அண்மையில் ஓர் ஊடகம் என்னிடம் கேள்வி கேட்டபோது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கூட்டுத் தலைமை தேவையென்றேன். மாவை சேனாதிராஜா, சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் அந்தக் கூட்டுத் தலைமையில் இடம்பிடிக்க வேண்டும் என்றும் கூறினேன். தீர்மானங்கள் அவர்கள் மூவராலும் ஒருமித்து எடுக்கப்பட வேண்டும் என்றேன்.

சம்பந்தனை இருக்க விடுங்கள். தற்போதைய பாராளுமன்ற காலம் முடிவடையும்போது அவரின் அங்கத்துவம் தானாகவே முடிந்துவிடும். திருகோணமலை மக்களின் தேவைகளைப் பார்க்க - பாதுகாக்க சம்பந்தன் ஒரு தகுந்த அமைப்பை உண்டு பண்ணுவார். இல்லை என்றால் அதனை அமைக்க இலங்கை தமிழரசுக் கட்சி அவருக்கு உதவி வழங்க வேண்டும். சம்பந்தனை வெளியேற்றுவதில் எனக்கு உடன்பாடில்லை. சம்பந்தன் அவர்கள் தனது சுயசரிதையை அல்லது தனது காலத்தில் நடந்த முக்கிய அரசியல் சந்திப்புகள் பற்றி ஒரு நூலை வெளியிட முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# குரங்குகளுக்கு ‘லூப் கருத்தடை’

“குரங்குகளின் கருப்பையின் அளவு மற்றும் கருப்பை வாயில் IUD களைச் செருகுவதற்கான பரிசோதனையில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்,” என்றார்.

“தற்போது பெண்களுக்குப் பயன்படுத்தப்படும் லூப் குரங்குகளுக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்குப் பெரிதாக உள்ளது. எனவே, குரங்குகளுக்குள் ஐயுடியைச் செருகுவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறியக் கால்நடைத் துறை மற்றும் மகளிர் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த இரண்டு மருத்துவர்களைக் கொண்ட குழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திட்டம் வெற்றியடைந்தால், இனி அறுவை சிகிச்சைகள் இருக்காது, ஆனால் எங்களுக்குத் தேவையானது அவர்களுக்கு மயக்க மருந்து கொடுப்பது மட்டுமே. IUD யை நிறுவிய பின், விந்தணுக்கள் கருப்பையை அடைவதைத் தடுக்கிறது மற்றும் குரங்குகள் கருத்தரிப்பதைத் தடுக்கிறது,

குரங்குகளுக்கு ஏற்ற IUD களை தயாரிப்பதற்காகக் குறைந்தபட்சம் 1,000 ரூபாய் செலவிடப்படும்.

IUD தயாரிக்கும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

“மக்கள் குரங்குகளைப் பிடித்து சில இடங்களில் விடுவார்கள். IUDகள் பரவலாகக் கிடைத்தால், மக்கள் தாங்களாகவே குரங்குகளுக்குள் அவற்றைச் செலுத்தி அவற்றின் தொகையைக் கட்டுப்படுத்த உதவலாம்,” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# VAT எகிறியது

2022ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வரி வருமானம் 50 சதவீதம் உயர்ந்திருந்தாலும், அத்தகைய வருமானம் சர்வதேச நாணய நிதியம் (IMF) நிர்ணயித்த இலக்குகளை இன்னும் எட்டவில்லை என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட VAT திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. அதன் பின்னணியில் உள்ள காரணத்தை விளக்கிய குணவர்தன, “IMF நிர்ணயித்த வருமான இலக்குகளை எங்களால் பூர்த்தி செய்ய முடியாததால், இலங்கைக்கு இதுவரை IMF இரண்டாவது தவணை கிடைக்கவில்லை என்றார்.

VAT சதவீதத்தை அதிகரிப்பதுடன், முன்னர் VAT இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் புதிய வீதம் பொருந்தும் என்று அறிவித்துள்ளார்.

# ஐம்பொன் சிலை மீட்பு: கடத்தியவர் தப்பினார்

யாழ்ப்பாணம் ஐந்து சந்தி பகுதியில் வைத்து இந்த சிலை கைப்பற்றப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிலையை கடத்தி வந்தவர் தப்பி தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி.மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்த நடவடிக்கை முன்னெடுத்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அந்தப் பகுதிக்கு பொலிஸார் சென்ற போது அதனை கடத்தி வந்தவர் தப்பித்து சென்றுள்ளார்.

சிலை கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

# “பிரச்சினைகள் அப்படியே உள்ளன”

பாராளுமன்ற உறுப்பினரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். சுமந்திரனையும் கொழும்பில், செவ்வாய்க்கிழமை (31) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிற தமிழ்த் தேசிய பிரச்சனை, நில அபகரிப்புக்கள் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் இன்னமும் இரத்துச் செய்யப்படாமல் இருப்பது போன்ற பல விடயங்கள் பற்றி குறித்த சந்திப்பின் போது அவர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

# சுமனரத்தன தேரர் தாயின் கல்லறை உடைக்கப்பட்டதா?

அதிகாரப்பூர்வமாக, அழைப்பு விடுத்து, அவரது தரப்பையும் கேட்டு, அதில் ஏதும் உண்மை உள்ளதா, இல்லையா என்ற விபரங்களை முழு நாட்டுக்கும் தெரியப்படுத்துங்கள் எனப் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தவிசாளர், இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் தான் நேரடியாக உரையாடியுள்ளேன் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பல்லாண்டுகளாக மேலாக பொது வெளியில் இனவாத கருத்துகளைக் கூறியும், வன்முறைகளில் ஈடுபட்டும் வரும் அம்பிட்டிய சுமனரத்தன தேரர் மீது ஐசிசிபிஆர் என்ற சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டம் இன்னமும் பாயவில்லை.

இச்சட்டத்திலிருந்து இவருக்கு இனிமேல் விலக்கு வழங்க முடியாது. இனி இது முடிவுக்கு வர வேண்டும். இவரது பாரதூரமான இனவாத கருத்துகளுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் மூலம் நடவடிக்கை எடுப்பார் என நான் நம்புகிறேன்.

இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் என்னிடம் உரையாடி உள்ளார். அதேபோல், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் திருமதி. சிறிகாந்தாவுடன் நான் உரையாடினேன். தனது தாயின் கல்லறை உடைக்கப்பட்டதாக, தேரர் பகிரங்கமாகக் கூறியுள்ளமை தொடர்பாக உண்மையைக் கண்டறியுமாறு அவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். இதுவே முறைப்படி செய்யப்பட வேண்டிய காரியம் என நினைக்கிறேன் என்றார்.

# “இருள் நிறைந்த படுகுழி நிச்சயம்”

கடன் வழங்குநர்களிடம் பொது இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் இதுவரையில் எந்தவொரு தரப்பும் அவ்வாறு எந்த இணக்கத்தையும் வெளியிடவில்லை என்றார்.

வெளிநாட்டுக் கடன் தொடர்பில் அரசாங்கம் ஓர் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சீனாவுடன் இணக்கம் பெற்றுக்கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறினாலும் இதுவரையில் அவ்வாறு எந்த இணக்கமும் கிடைக்கவில்லை என்றார்.

குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருவேளை அந்த இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொண்டால் பெற்றுக்கொண்ட கடன்களை மீளச் செலுத்த நேரிடும். அதற்கமைய, தற்போது எமக்கு இருக்கும் வரையறுக்கப்பட்ட இருப்பை தொடர்ந்து இலக்க நேரிடும் என்றும் கூறினார்.

மறுபுறம் கடன் வழங்குநர்களுடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியாவிட்டால் செம்பியா, கானா ஆகிய நாடுகளைப் போன்று அடுத்த வருடம் இருள் நிறைந்த படுகுழியில் தள்ளப்படுவோம். அதேபோன்று, லெபனான், கிறீஸ் போன்ற நாடுகளின் பாதையில் பயணிக்க நேரிடும் என்றார்.

அதன் காரணமாக இந்த இரு விடயங்களில் எது இடம்பெற்றாலும் அடுத்த வருடம் நெருக்கடி நிலைமை நிச்சயம். கடனை மீளச் செலுத்த ஆரம்பித்தாலும் சிக்கலை சந்திக்க நேரிடும். கடன் மீளச் செலுத்துவது தொடர்பில் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வராவிட்டாலும் நெருக்கடியை சந்திக்க நேரிடும். இதுவே எமது நாட்டின் எதிர்கால நிலைமையாகும். மேலும், இந்த பாராதூர நிலைமை தொடர்பில் சிந்திக்காமல், உலக வங்கியும் எமக்கு நிவாரணங்களை வழங்குவதாகவும் ஆசிய அபிவிருத்தி வங்கி, அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் எமக்கு உதவிக் கரங்களை வழங்கி வருவதாகவும் கூறி கொண்டு முன்னோக்கி சென்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவரையில் அதற்கான எந்த இணக்கமும் ஏற்பட வில்லை என்பதே உண்மையான விடயமாகும் என்றார்.

# தமிழர்களின் தலைகளை கொய்யும் வழக்கு ஒத்திவைப்பு

ஊடகங்களுக்குத் தேரர் வழங்கிய செவ்வியை இறுவட்டில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான் வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதி வழக்கு ஒத்திவைத்துள்ளார்.

குறித்த தேரர் மட்டக்களப்பு ஜெயந்திபுர விகாரைக்கு அருகாமையில் வீதியைக் கடந்த 25ஆம் திகதி மறித்து, தெற்கிலுள்ள தமிழர்கள் ஒவ்வொருவரினதும் தலையை வெட்டி அனுப்பப்போவதாக அச்சுறுத்தல் விடுத்து தமிழர்களை மிக வேதனைப்படும் அளவிற்கு துஷணவார்த்தைகளை பிரயோகித்துச் சத்தமிட்டார்.

தமிழ்-சிங்கள மக்களிடையே பாரிய இன முரண்பாட்டைத் தோற்றிவிக்கும் முகமாகக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளமை ஊடகங்கள் ஊடாக வெளிவந்துள்ளது.இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கத் தேரர் முயற்சித்ததுடன் தமிழ் மக்களின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இனங்களுக்கிடையே இன முறுகலை ஏற்படுத்தும் விதமாகவும் தமிழர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த இந்த தேரரின் செயற்பாட்டைக் கண்டித்தது அவருக்கு எதிராகத் தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் க. மோகன் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை (27) முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவிடம் இந்த விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் தொடர் விசாரணையின் பின்னர் தேரருக்கு எதிராக முறைப்பாட்டின் பிரதிவாதியாக மோகனை குறிப்பிட்டு தேரருக்கு எதிராக இன்று (31) மனுத் தாக்கல் செய்தனர்.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் பீற்றர் போல் மனுவை விசரணைக்கு எடுத்து ஊடகங்களுக்கு தேரர் வழங்கிய செவியை இறுவட்டுக்களில் பதிவு செய்து 20ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டு எதிர்வரும் 20ஆம் திகதி வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

# “பிற்போக்கான வரி அதிகரிப்பு”

அரச வரி வருவாயை போதிய அளவு அதிகரிக்க முடியாத நிலையில்,வரி செலுத்த முடியுமானவர்களடமிருந்து அதிகபட்ச வரிகளை அறவிட்டு முற்போக்கான வரி அறவீட்டு நடைமுறைகளைப் பின்பற்றுவதை விடுத்து, பிற்போக்குத்தனமாக சாதாரண மக்களிடம் வரிகளை அதிகரித்து அரசாங்கம் இழந்த வருவாயை நாட்டு மக்களின் தோள்களில் சுமத்தி அறவிட நடவடிக்கை எடுத்துவருவதாகவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் ஒன்றிணைந்த குழுவுடன் செவ்வாய்க்கிழமை (31) நடந்த கலந்துரையாடலின் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எந்த மக்கள் ஆணையும் இல்லாமல் 220 இலட்சம் பேர் மீது எவ்வாறு வரிச்சுமையை சுமத்துவது என்று தாம் கேள்வி எழுப்புவதாகவும், மக்களின் பாதுகாவலர்களாக இருந்து எவ்வாறு இத்தகைய முடிவுகளை எடுக்க முடியும் என்று நினைத்துக்கூடப் பார்க்க முடியாது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

வருடத்திற்கு இரண்டு முறை மட்டுமே விலை திருத்தம் செய்ய முடியும் என்ற விதி இருந்தும் 3 மாதங்களுக்கு ஒரு தடவை மின் கட்டணத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. போலியான தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் முன்வைத்து வரிச் சுமையை அதிகரித்து நாட்டின் நுகர்வோரை அவஸ்தைப்பட வைத்து, ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒரு தடவை மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கத் தயாராக உள்ளனர். மக்களின் தோள்களில் பெரும் அழுத்தத்தையும்,அசௌகரியத்தையும், வலியையும் கொண்டுவரும் பொறுப்பற்ற செயல் என்பதை இந்த முடிவுகள் நிரூபிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# “மொட்டு இன்றி அரசாங்கம் மலராது”

எங்களின் பங்களிப்பின்றி அரசாங்கமொன்றை உருவாக்க முடியாது என்று தெரிவித்த அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன, பொதுஜன பெரமுனவின் தலைமையில் தனித்து ஆட்சி அமைக்க முடியாவிட்டால் பெரும் அதிகாரம் பொருந்திய எதிர்க் கட்சியாகச் செயற்படுவோம் தெரிவித்தார்.

களுத்துறை, பண்டாரகம, மில்லனிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் மக்கள் இன்றும் இருக்கிறார்கள். இருந்தபோதும் துரதிர்ஷ்டவசமாக கோட்டாபய ராஜபக்ஷ வை ஜனாதிபதியாக்கினோம். ஜனாதிபதியானதன் பின்னர் கோட்டா சேதன பசளைக்கு முக்கியத்துவம் கொடுத்ததால், நாங்களும் அதனால் சிக்கலைச் சந்தித்தோம். இறுதியில் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்ற கோட்டாபய, ஒரு இலட்சம் பேரைக் கூட கொழும்புக்கு அழைத்துவர முடியாதவர்களுக்குப் பயந்தார். அந்த பயத்தின் பிரதிபலனாகவே வீடுகளுக்கு தீரவைக்கப்பட்டது. கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஆரம்பத்திலேயே அவர்களை அடக்கியிருந்தால் இந்த பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது என்றார்.

இருந்தபோதும் மக்கள் விடுதலை முன்னணி தமக்கு இருக்கும் மக்கள் ஆதரவைக் காட்டி கூட்டங்களை நடத்தி வருகிறது. இலங்கை அரசியல் வரலாற்றில் சரியான முறையில் சுவரொட்டிகளை மக்கள் விடுதலை முன்னணியே காட்சிப்படுத்தியது. ஆனால், தேர்தல் இறுதியில் 03 சதவீதமான வாக்குகளையே பெற்றுக்கொள்வார்கள்.

அடுத்த வருடம் நாங்கள் தனியான அரசாங்கமொன்றை உருவாக்கவே திட்டமிட்டுள்ளோம். அது சிறந்த அரசாங்கமாக இருக்கும். ஒருவேளை எங்களால் ஆட்சி அமைக்க முடியாவிட்டால் பெரும் பலம் பொருந்திய எதிர்க் கட்சியாகச் செயற்படுவோம் என்றார்.

# பாதி சிகரெட் புகைத்த பி.சி மயங்கினார்

அதன்பின்னர் அவரது கழுத்திலிருந்த தங்க நகை மற்றும் கைத்தொலைபேசி ஆகியன அபகரித்துச் செல்லப்பட்டுள்ளதாக புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சொத்துக்களின் பெறுமதி 432,000 ரூபாய் என பொலிஸ் கான்ஸ்டபிளின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மிஹிந்தலை பிரதேசத்தை வசிப்பிடமாகவும், அனுராதபுரம், மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் இந்த பொலிஸ் கான்ஸ்டபிள், சட்டத்தரணி ஒருவரை சந்திப்பதற்காக கொழும்பு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின் கட்டண திருத்தத்தில் மாற்றம்

இலங்கை மின்சாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மின்சார விநியோகம் தொடர்பான பொதுவான கொள்கை வழிகாட்டியை தயாரிப்பதற்கான அதிகாரம் மின்சார அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# "பெருந்தோட்ட கர்ப்பிணிகளுக்கு மன உளைச்சல்"

இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை அதிகரித்து வருகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கும், அவ்வாறாயின் அது சம்பந்தமாக மேற்கொள்ள வேண்டிய குறுகிய, நடுத்தர நீண்ட கால நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அடையாளங்காணப்பட்ட நடவடிக்கைகளை துரிதமாக செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்குமான பாராளுமன்ற விசேட குழு பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியுள்ளது.

நாடளாவிய ரீதியில் திரிபோஷ வழங்கும் வேலைத்திட்டம் தொடர்பில் குழுவில் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. தற்போது 06 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு திரிபோஷ வழங்கப்படுவதில்லை என்றும் 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு மட்டுமே திரிபோஷ வழங்கப்படுவதாகவும் இலங்கை திரிபோஷ நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவில் தெரிவித்துள்ளனர்.

06 மாதங்கள் முதல் 3 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கான திரிபோஷ வழங்கப்படாமை தொடர்பில் கருத்து தெரிவித்த நிறுவன அதிகாரிகள், அந்த வயதினருக்கான திரிபோஷ



உற்பத்தியில் உரிய அளவுகோல்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக திரிபோஷ தயாரிக்கப்படுவதில்லை எனத் தெரிவித்தனர். எவ்வாறாயினும், சுகாதார அமைச்சினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட்டதன் பின்னர், அந்த வயதினருக்கும் திரிபோஷாவை உற்பத்தி செய்ய முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பெருந்தோட்டத்துடன் தொடர்புடைய குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கு தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. மேலும், தோட்டங்களின் சில பகுதிகளில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் (MOH) மூடப்படுவதால், தோட்டத் தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பெருந்தோட்டங்களிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் மன உளைச்சல், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை நேரடியாகப் பாதிக்கிறது என்று அதிகாரிகளிடம் குழு சுட்டிக்காட்டியது.

# சடலம் மீட்பு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடற்கரையோரம் வயோதிபர் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை (30) மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் ஏற்பட்ட முரண்பாடுகளையடுத்து, வீட்டை விட்டு வெளியேறிய மட்டக்களப்பு - கருவப்பங்கேணியைச் சேர்ந்த 89 வயதுடைய ஆரியவன்ச விஜயரட்ணம் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்ததான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிர்வாண சடலம் மீட்பு

தலையில் சிறு காயத்துடன் நிர்வாணமாகக் கிடந்த ஆண்ணொருவரின் சடலம், செவ்வாய்க்கிழமை (31) மீட்கப்பட்டுள்ளது.

மாரவில தெமட்டபிட்டிய ஆரம்ப பாடசாலைக்கு அருகில் இருந்த இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வென்னப்புவ - மேற்கு தும்மலதெனிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

தச்சுத் தொழிலாளியான குறித்த நபர் கடந்த காலங்களில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் இருந்த இடத்திற்கு அருகில் தேவாலய மைதானத்தில் மோட்டார் சைக்கிள், தலைக்கவசம் மற்றும் சில ஆடைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன்னாரின் இயற்கை வளங்கள் விற்பனை:

# 70 ஆயிரம் மக்களின் நிலை என்ன?

## மீனவ சமாசச் செயலாளர் கேள்வி

■ பு.கஜிந்தன்

மன்னாரின் இயற்கை வளங்கள் ஒவ்வொன்றாக விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில் மாவட்டத்தின் 70 ஆயிரம் மக்களின் எதிர்கால நிலை தொடர்பில் அரசியல்வாதிகள் அக்கறையின்றி செயல்படுவதாக மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளர் ஆலம் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழில் உள்ள தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்ற மீனவ சங்கங்களின் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்களான சூரிய சக்தி, கடல் வளம், நிலம் என்பன அபிவிருத்தி என்ற போர்வையில் அந்நிய நாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எமது மன்னார் மாவட்டம் கடல் மட்டத்திலிருந்து கீழ் இறங்கிக் காணப்படுவதால் கடல் அரிப்பின் காரணமாக சிலவேளைகளில்




எமது மாவட்டம் வரைபடத்திலிருந்து காணாமல் போகக்கூடிய அபாயம் ஏற்படலாம்.

ஏனெனில், அபிவிருத்தி என்ற போர்வையில் மிகப்பெரிய காற்றாலை திட்டம் ஒன்றை அதானி குழுமம் மேற்கொண்டு வருகின்ற நிலையில் அதற்காக நிலத்தில் பாரிய துளைகள் இடப்படவுள்ளன. அது மட்டுமல்லாது தற்போது புதிய கடற்தொழில் சட்டம் என்ற போர்வையில் வெளிநாட்டுப் படகுகளை எமது பிரதேசத்தில் கடற்றொழில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

எமது மாவட்டத்தில் உள்ள 70 ஆயிரம் குடும்பங்களில் 90 சதவீதமான குடும்பங்கள் கடற்தொழிலையே நம்பி வாழ்கின்ற நிலையில் அவர்களின் நிலை தொடர்பில் அரசியல்வாதிகள் சிந்திக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

"வடக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பது தேவையற்ற விடயங்களில் இனவாதத்தைப் பேசுவதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காது" என தெரிவித்துள்ளார்.

# பூட்டிய வீட்டில் சடலம் மீட்பு

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த இளைஞன் ஒருவர் சடலமாக திங்கட்கிழமை (30) மீட்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த குணராசா தனுஷன் எனும் 25 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞனின் உறவினர்கள் வெளியூரில் வசிக்கும் நிலையில் அவர்களின் வீட்டினை குறிப்பிட்ட இளைஞன் பராமரித்து வந்துள்ளதுடன், வீட்டின் பாதுகாப்புக்காக அங்குத் தங்கியும் இருந்துள்ளார்.

இளைஞனின் வீடும் அருகில் உள்ளதால், தனது வீட்டிற்கு உணவுக்காக சென்று வரும் நிலையில், திங்கட்கிழமை உணவருந்த வராததால், வீட்டார் இளைஞனைத் தேடிச் சென்றபோது, பூட்டிய வீட்டிலுள்ள படுக்கையில் இளைஞன் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# பேருந்து கவிழ்ந்து விபத்து

■ எஸ்.தில்லைநாதன்



பருத்தித்துறை - கொடிகாமம் தனியார் பயணிகள் பேருந்து ஒன்று செவ்வாய்க்கிழமை (31) கவிழந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை - கொடிகாமம் வழித்தடத்தில் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

கறுக்காய் - வரணி பகுதியில் இருந்து பருத்தித்துறை பேருந்து நிலையத்தை நோக்கிப் பயணித்துள்ளது. இவ்வாறு சில பயணிகளை ஏற்றிச் சென்றபோது கொடிகாமம் - புலோலி பிரதான வீதியில் விபத்துக்குள்ளானது.

பேருந்தில் சிக்கிய பயணிகளை அவ்வீதியூடாக பயணித்தவர்கள் உடனடியாக மீட்டுள்ளனர்.

இதில் சில பயணிகளுக்கு சிறு பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், காயமடைந்த நடத்துனர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாரதியின் நித்திரை கலக்கமே காரணமாகவே குறித்த பேருந்து கவிழ்ந்ததற்கு காரணமாக இருக்கலாமென நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

# 29 அபிவிருத்தி திட்டங்களை வர்த்தமானியில் வெளியிடவும்

**வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ள அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்**

இந்த வருடத்தில் 29 அபிவிருத்தி திட்டங்கள் வர்த்தமானியில் வெளியிடவுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பெரிய மாத்தறை, ஹிக்கடுவ, அம்பலாங்கொட, சீதாவக, சீதாவகபுர, பாணந்துறை, ஹொரண, வத்தளை, ஜா-எல, கம்பஹா, கட்டான, மஹர, கெக்கிராவ, தலாவ, மாவனல்லை, குண்டசாலை, நாவலப்பிட்டி, கம்பளை, ஹட்டன், வெலிமடை, பண்டாரவளை, வெல்லவாய, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை பிரதேச அபிவிருத்தித் திட்டம் ஆகியன வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளது.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய, திருகோணமலை, எல்ல, ஹம்பாந்தோட்டை மற்றும் ஹிக்கடுவ அபிவிருத்தித் திட்டம் என்பன வர்த்தமானியில் வெளியிடப்பட உள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. இவற்றில் எல்ல அபிவிருத்தித் திட்டம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

# கடைக்குள் விழுந்த கஸ்தூரி மான்

■ ரஞ்ஜித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரில் கடையொன்றினுள் விழுந்த கஸ்தூரி மான் ஒன்றை கடையின் ஊழியர்கள் மற்றும் ஹட்டன் பொலிஸார் இணைந்து பிடித்து காட்டுக்குள் விடுவித்துள்ளனர்.

கடையின் பின்புறம் உள்ள பற்றைக்காடு வழியாக கடையின் மேற்கூரையில் ஏறிய மான் கடைக்குள் விழுந்து காயமடைந்துள்ளது.

இது குறித்து கடை ஊழியர்கள் ஹட்டன் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, கஸ்தூரி மானுக்கு சிகிச்சையளித்து மீண்டும் காட்டுக்குள் விடுவித்துள்ளனர்.



# பூங்கா ஒன்றுக்கு நீதிமன்றம் தடை

யாழ்ப்பாணம் பகுதியில் சில காலமாக இயங்கி வந்த பூங்கா ஒன்றிற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

சுமார் 80 பேர்ச்சஸ் பரப்பளவில் பராமரிக்கப்பட்டு வந்த இத்தோட்டத்தை அழகுபடுத்தும் வகையில் சிறிய அறைகள் கட்டப்பட்டு, அந்த அறைகளில் பல்வேறு தவறான சம்பவங்கள் நடப்பதாக முறைப்பாடுகள் எழுந்ததையடுத்து இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், திருமண நிகழ்ச்சிகளின்போது படப்பிடிப்பு நடத்துவதற்கு ஏற்ற வகையில் இந்த இடம் அமைக்கப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இந்த சம்பவம் தொடர்பில் அதன் உரிமையாளரான 78 வயதான வர்த்தகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்த பூங்காவில் உள்ள அறையில் சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த இடம் இனங்காணப்பட்டது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் யாழ். பிரதேச வாசிகளிடம் இருந்து பெறப்பட்ட வாக்குமூலத்தின் பிரகாரம் இந்த பூங்கா தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதன் உரிமையாளர் இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: நிர்வாணமாக ஓடிய சிறுவன்

குருநாகல் - கொஹிலகெதர பிரதேசத்தில் 17 வயதுடைய சிறுவனால், 15 வயதுடைய சிறுமி ஒருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (31) பதிவாகியுள்ளது.

சிறுமியின் வீட்டில் பெரியவர்கள் இல்லாதபோது குறித்த சிறுவன் பல முறை வீட்டிற்கு வந்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவத்தினத்தன்று சிறுமியின் பாட்டி மற்றும் அவரது சகோதரி சம்பவத்தைக் கண்டதையடுத்து, குறித்த சிறுவன் அணிந்திருந்த ஆடைகளையும் விட்டு நிர்வாணமாகத் தப்பி ஓடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சிறுமியை குருநாகல் போதனா வைத்தியசாலையில் சட்ட



வைத்தியரிடம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைச் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மேற்கொண்டு வருகின்றது.

மேலும், குறித்த சிறுமி, கசிப்பு மற்றும் பிற போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தக் காயங்களுடன் சடலம் மீட்பு

லுனுவில- தெமடபிட்டிய பாடசாலை அருகில் நிர்வாணமாக ஆண் ஒருவரின் சடலம் செவ்வாய்க்கிழமை (31) மீட்கப்பட்டுள்ளதாக மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலத்தின் தலையில் இரத்தக் காயம் இருந்ததாகவும், இது ஒரு கொலை என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் அருகிலிருந்து மோட்டார் சைக்கிள் தலைக்கவசமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், உயிரிழந்தவர் வென்னப்புவ தும்மலதெனிய பகுதியைச் சேர்ந்த அசேல பெரேரா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# பிறக்கும் குழந்தைகளை பாதிக்கும் கர்ப்பிணிகளின் மன உளைச்சல்

கொரோனாவுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள் கொஞ்சம், கொஞ்சமாகத் தலையைக் காண்பிக்க ஆரம்பித்துள்ளன. அக்காலப்பகுதியில் பெரும்பாலான திருமணங்கள் நடைபெறவில்லை. அத்துடன் திருமணத்துக்கான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. இதனால், பிறப்பு சதவீதம் குறைந்துவிட்டது எனலாம். எனினும், இறப்பு சதவீதம் அதிகரித்துள்ளமை புள்ளிவிபரத் தகவல்களின் ஊடாக தெரியவந்துள்ளது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் கடந்த 2 வருடங்களாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 2012 முதல் 2013 ஜூன் வரை இலங்கையில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 125,626 ஆக பதிவாகியுள்ளது. எனினும், 2022 ஜூன் முதல் 2023 ஜூன் வரையிலான இறப்புகளின் எண்ணிக்கை 190,600 என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் கொரோனாத்தொற்று பரவியதன் பின்னர் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும், மரணங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், உலகில் சராசரியாக வருடாந்த இறப்பு சதவீதம் 15 சதவீதத்திலிருந்து 45 சதவீதத்திற்கு இடையில் ஒரு சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே இலங்கையில் சிறுவர்களின் போசாக்கின்மை தொடர்பில் ஆராய்ந்த பாராளுமன்ற விசே குழுவில் பல்வேறான தகவல்கள் அம்பலமாகியுள்ளன. தற்போது 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு திரிபோஷ வழங்கப்படுவதில்லை என்றும் 3 முதல் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு மட்டுமே திரிபோஷ வழங்கப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

திரிபோஷ உற்பத்தியில் உரிய அளவுகோல்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினை காரணமாக 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான குழந்தைகளுக்கு திரிபோஷ தயாரிக்கப்படுவதில்லை என்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது பெருந்தோட்டத்துடன் தொடர்புடைய குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் போசாக்கு தேவைகளைப் பாதிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. சிறுவர் போசாக்கின்மை சரியான உணவு கிடைக்காமை காரணமாக மாத்திரம் ஏற்பட்டுள்ள நிலைமை மட்டுமல்லாது, தவறான உணவுப் பழக்கங்களும் அதற்குக் காரணமாக இருக்கின்றது. இதனிடையே பெருந்தோட்டங்களிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களின் மன உளைச்சல், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை நேரடியாகப் பாதிக்கிறமையும் கண்டறியப்பட்டுள்ளது.

பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில், குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களின் போஷாக்கான உணவுக்கு திரிபோஷா முக்கிய பங்கை வகிக்கின்றது.

பிள்ளை மடுவங்களில் ஒவ்வொரு நாளும் இரண்டு தடவைகள், திரிபோஷா உருண்டைகள் வழங்கப்பட்டன. அத்துடன், ஒரு கிளாஸ் பசும் பாலும் வழங்கப்பட்டன. அந்த நடைமுறைகள் எல்லாம் காணாமலாக்கப்பட்டுள்ளன.

இதனால், பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களைப் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்பது மட்டுமே நிதர்சனம்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# திசை தெரியாது தடுமாறும் அரசாங்கம்



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கையின் இனப் பிரச்சினையோடு தொடர்புடைய 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை பூரணமாக நிறைவேற்றுவதாக அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்துக்கு என்ன நடந்தது?

இனப் பிரச்சினையை தீர்க்காமல் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்று அவர் கடந்த வருடம் புதிய பாராளுமன்ற அமர்வைத் திறந்து வைத்து முன்வைத்த தமது கொள்கை அறிக்கையில் குறிப்பிட்டார். ஆனால், கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இனப் பிரச்சினையைப் பற்றி எவரும் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

இப்போது ஜனாதிபதி நாட்டின் தேர்தல் சட்டங்களை மாற்றப் போவதாகக் கூறுகிறார். அதற்காக அவர் ஒக்டோபர் 16ஆம் திகதி வர்த்தமானி மூலம் முன்னாள் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் 9 பேர் கொண்ட நிபுணர்கள் குழுவொன்றையும் நியமித்து இருக்கிறார். புதிய அரசியலமைப்பில் என்ன? என்ன விடயங்கள் உள்ளடப்பட வேண்டும் என்பதையும் அவர் அக்குழுவினருக்கு அந்த வர்த்தமானி மூலம் ஆலோசனை வழங்கியிருக்கிறார். ஆனால், இனப் பிரச்சினை தொடர்பாக அவர் எவ்வித ஆலோசனையும் அந்த குழுவினருக்கு வழங்கவில்லை. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக அவர் வேறு ஆலோசனைகளையாவது வழங்கவில்லை.

தேர்தல் சட்டத் திருத்த விடயத்திலும் அரசாங்கத்துக்குள் பொது இணக்கப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. ஜனாதிபதி மேற்படி குழுவை நியமித்து இரண்டு நாட்களில் பிரதமர் தினேஷ் குணவர்தன அதே நோக்கத்துக்காக அரசியல் கட்சிகளின் கூட்டமொன்றைக் கூட்டியிருந்தார். அதற்கிடையே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு தோகுதி வாரியாக 160 உறுப்பினர்களையும் தேசிய மற்றும் மாவட்ட விகிதாசார தேர்தல் முறையில் 65 உறுப்பினர்களையும் தெரிவு செய்வதற்காக எண்ணக்கருப் பத்திரம் (Concept paper) ஒன்றை அமைச்சரவையிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த மூவரில் ஒருவர் செய்வதை மற்ற இருவருக்கும் தெரியாது போல் தான் தெரிகிறது. ஆயினும் அவர் அவற்றை மதியாது அதே நோக்கத்துக்காகக் குழுவொன்றை நியமித்து இருக்கிறார். ஜனாதிபதியும் ஆளும் கட்சியும் நிர்வாக விடயங்களில் இணைந்து செயற்படுவதில்லை என்பது கடந்த திங்கட்கிழமை மற்றொரு விடயத்திலும் தெரிய வந்தது. தற்போதைய நிலையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாது என்று அன்று அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார். எனினும் எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தின் மூலம் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று அன்றே ஜனாதிபதி கூறியிருந்தார்.

அரசாங்கம் இவ்வாறு தடுமாறும் நிலையில், ஜனாதிபதிக்கும் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் இடையில் சில கருத்து முரண்பாடுகள் முற்றி வருவதாக செய்திகள் கூறுகின்றன. ராஜபக்ஷக்களுக்கு மிகவும் நெருக்கமான ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித்த அபேகுணவர்தன போன்றவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்க வேண்டும் என்று பொதுஜன முன்னணி கடந்த வருடம் முதல் ஜனாதிபதியிடம் கோரி வருகிறது. ஆனால், ஏதோ காரணங்களுக்காக ஜனாதிபதி அதனை நிறைவேற்றவில்லை. அதனால் தமது கட்சியின் வாக்குகளால் ஜனாதிபதி பதவியைப் பெற்ற ரணில் விக்ரமசிங்க அக்கட்சியை மதிப்பதில்லை என்று பொதுஜன முன்னணியினர் சில மாதங்களாகக் கூறி வருகின்றனர்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி கடந்த 23ஆம் திகதி அமைச்சரவையில் சிறிய மாற்றமொன்றை மேற்கொண்டார். அதன் படி நான்கு பேரின் பொறுப்புக்கள் மாற்றப்பட்டுள்ளன. கெஹெலிய ரம்புக்வெல்லயிடம் இருந்த சுகாதார அமைச்சு அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் வழங்கப்பட்டுள்ளது. ரமேஷ் பத்திரணவிடம் இருந்த பெருந்தோட்டத்துறை அமைச்சு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் வழங்கப்பட்டுள்ளது. எம்.பி. பதவியை இழந்த நஸீர் அஹமத்திடம் இருந்த சுற்றாடல்துறை அமைச்சை சில நாட்களாக தம்மிடம் வைத்திருந்த ஜனாதிபதி அதனை கெஹெலியவிடம் கொடுத்திருக்கிறார். நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பெருந்தோட்டத்துறைக்கும் இராஜங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ரமேஷ் பத்திரண ஒரு மருத்துவராவார். அவர் இது வரை ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகவில்லை. அவரிடம் சுகாதார அமைச்சை கையளித்தமை பொருத்தமாகும். அதேவேளை, விவசாய அமைச்சரிடமே பெருந்தோட்டத்துறையையும் கையளித்தமையும் பொருத்தமான விடயமாகும்.

இதில் பெருந்தோட்டத்துறையை மஹிந்த அமரவீரவிடம் கொடுத்தமை எவ்வளவு பொருத்தமானதாக இருந்த போதிலும், பொதுஜன முன்னணியினர் அதை எதிர்க்கின்றனர். தமது கட்சி உறுப்பினர் ஒருவரிடம் இருந்த ஓர் அமைச்சுப் பொறுப்பை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த ஒருவரிடம் கொடுத்ததாகவே அவர்கள் குறைகூறுகின்றனர். அவர்களுக்கு அரசியல் போட்டாபோட்டியே முக்கியமாக இருக்கிறது. இந்த அமைச்சரவை மாற்றத்தோடு பொதுஜன முன்னணியினர் ஜனாதிபதியை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். எதிர்வரும் வரவு- செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பது தொடர்பாக தமது கட்சி ஆராய்ந்து வருவதாக பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுவின் (கோப்) தவிசாளர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார கூறியிருந்தார்.

வரவு- செலவுத் திட்டம் தோல்வியடைந்தால் அமைச்சரவை தாமாகவே கலைக்கப்பட்டதாகக் கருதப்படும். அதனை அடுத்து ஜனாதிபதி புதிய அமைச்சரவையை நியமிக்க வேண்டும். அது ஜனாதிபதியை பாதிக்காது.

ஜனாதிபதி இதற்கு முன்னரும் பொதுஜன முன்னணியை பொருட்படுத்தாது செயற்பட்டு இருக்கிறார். கடந்த வருடம் தாம் பதவிக்கு வந்து ஒரு மாதத்துக்குள் அதாவது கடந்த வருடம் ஓகஸ்ட் 1ஆம் திகதி அவர் ஜனாதிபதி கோட்டாபயவால் தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழர்களின் ஆறு அமைப்புகளினதும் 316 நபர்களினதும் தடையை நீக்கினார். இது தொடர்பாக அவர் ஆளும் கட்சியின் ஆலோசனையைப் பெறவில்லை.

இவ்வாறு தம்மைப் பதவியில் அமர்த்திய ஆளும் கட்சியைச் சீண்டிக் கொண்டு இருக்கும் ரணில், நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக சகல அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்று கூறியிருந்தார். கடந்த வருடமும் அவர் சர்வகட்சி அரசாங்கமொன்றை நிறுவப் போவதாக அறிவித்து இருந்தார்.

ஒன்று சேர வேண்டும் என்ற கோரிக்கை நேர்மையானதாக இருந்தால் வெறுமனே அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்காகவன்றி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு திட்டத்தின் கீழ் தான் கட்சிகள் ஒன்று சேர வேண்டும். கடந்த வருடம் அவர் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றைப் பற்றி ஆலோசனை முன்வைத்த போது, வீரவன்சவின் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் பொதுவான திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு கூறிய போது அதனை அவர் பொருட்படுத்தவில்லை.

அதாவது அவ்வாறானதொரு திட்டம் ஜனாதிபதியிடம் அப்போதும் இருக்கவில்லை, இப்போதும் இல்லை. குறைந்தபட்சம் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியும் ஆளும் கட்சியுமாவது கலந்துரையாடுவதாகத் தெரியவில்லை. எல்லோரும் ஒன்று சேர வேண்டும் என்பதன் அர்த்தம் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி அக்கட்சிகளின் விமர்சனங்களை நிறுத்துவதற்காகவே தெரிகிறது. இது பொதுஜன முன்னணியை மேலும் சீண்டுவதாகவே அமையும்.

ஆட்சி அதிகாரத்தில் தம்மோடு இணைந்து இருப்பவர்களை இவ்வாறு சீண்டும் போக்கு ரணிலிடம் இருக்கிறது. 2001இல் பிரதமராகப் பதவியேற்ற போது, ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, புலிகளுடன் ரணில் செய்து கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையையோ சமாதான பேச்சுவார்த்தைகளையோ குழப்பாத நிலையிலும் ஐ.தே.க. தலைவர்கள் அவரை தனிப்பட்ட முறையில் ஆத்திரமூட்டி இறுதியில் அவர் ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தை 2004 பெப்ரவரி மாதம் கலைத்துவிட்டார். அதேபோல் 2015இல் மைததிரிபால சிறிசேனவுடன் அரசாங்கத்தை கைப்பற்றிய ரணில், பின்னர் ஜனாதிபதியாக இருந்த மைத்திரியை புறக்கணித்து செயற்படவும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை தடுக்கவும் முற்படவே இருவருக்கும் இடையே முறுகல் நிலை உருவாகியது. அது 2018இல் மைத்திரி சட்டவிரோதமான முறையில் ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்கும் அளவுக்கு சென்றது.

ஜனாதிபதிக்கும் ஆளும் கட்சிக்கும் இடையே எவ்வித முறுகல் நிலை இருந்த போதிலும் பொதுஜன முன்னணி ஜனாதிபதியை பதவிநீக்கம் செய்யவோ அல்லது ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து பொதுஜன முன்னணியின் ஆட்சியை கவிழ்க்கவோ நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்றே ஊகிக்கலாம்.



## வாழ்வியல் தரிசனம்

உங்களால் அறிவுப்பூர்வமாகவும் சிந்தனை ஓட்டங்களாலும் விஸ்தரிக்கப்படும் எண்ணங்கள், இந்தப் பிரபஞ்சங்கள் மகிழ்வதும் பதியப்படுகின்றன. பிரபஞ்சம் மகா பிரமாண்டமானது. இதனால் இந்த எண்ணங்களின் வலுவான சிந்தனைகள், அதேபோல் மேலும் பல பிரபஞ்சங்களின் சிந்தனைக் கற்றைகளுடன் இணைந்து கொள்கின்றன.

நல்ல விடயங்கள் வியாபித்திருக்கும்போது, சக்திமிகு மின்சாரம் போலவும் மின்காந்த அலைகளாகப் பிரபஞ்ச வலுவுடன் பயணிக்கின்றன. இது வெறும் கற்பனை அல்ல, கற்காத அநேகர் ஞானிகளாக, விற்பன்னர்களாக எங்ஙனம் உருவாகின்றார்கள் என்பதைச் சற்றே சிந்திப்பார்களாக!

மனிதர்களுக்குள்ளும் மாபெரும் காந்த சக்தி உண்டு. காதல் எப்படி வையகம் பூராவும் பரவுகின்றது. அன்பின் பரிமாணத்தை அளவிட முடியுமா?

நல்லனவற்றை எவன் தனது ஆன்ம சக்தியுடன் இணைந்து உருப்போடுகின்றானோ, அவன் அதன் வசமாகி விடுகின்றான். மெய்ஞானம், விஞ்ஞானம் எல்லாமே சிந்தனையின் வடிவங்கள்தான். இவை சூரியப்பிரகாசமானவை.

பருத்தியூர் பாால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### 3 காட்டு யானைகள் அட்டகாசம்

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பேராறு பகுதியில் இரவு நேரங்களில் மூன்று காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இரவு நேரங்களில் அச்சமாக இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


குறித்த காட்டு யானை வான்எல காட்டுப்பகுதியிலிருந்து செவ்வாய்க்கிழமை (31) அதிகாலை வயல்வெளி ஊடாக கந்தளாய் பேராறு பகுதிக்கு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

பேராறு, மதுரசா நகர், மூன்றாம் கொலனி, உள்ளிட்ட கிராமங்களில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றனர். குறித்த பகுதிகளில் தென்னை, வாழை, மாமரம் மற்றும் வீட்டுத் தோட்ட செய்கைகள் என்பனவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த கிராமங்களில் காட்டு யானைகள் பயிர்களை நாசம் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்

கந்தளாய் வனவிலங்கு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் இது வரைக்கும் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ள வில்லையெனவும் மக்கள் குற்றஞ்சாற்றுகின்றனர். எனவே தமது கிராமங்களுக்குச் சூழ பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப்.முபாரக்





# ஈழத்து ஆற்றுகையில் சிறப்புறும் முல்லைமோடி



தருமலிங்கம் லுகிர்தா
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்

**தமிழர்களினுடைய பாரம்பரியத்தை அடையாளப்படுத்துகின்ற கலைகளில் கூத்தும் ஒன்றாக விளங்குகின்றது. அந்த வகையில் கூத்து என்பது மெய்ப்பாடுகளின் வெளிப்பாடு என்று அழைக்கப்படுகின்றது. இக்கூத்துக்கள் ஆரம்ப காலத்தினை தொடர்ந்து ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியின் மூலம் பல்வேறு முன்னேற்றகரமான செயற்பாடுகளை கொண்டுள்ளது.**

ஈழத்தைப் பொறுத்தவரையில் பல வகையான கூத்து வடிவங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசத்திற்குப் பிரதேசம் கூத்து முறை வேறுபட்டுக் காணப்படும் ஈழத் தமிழரின் கூத்துகளில் ஆடல், பாடல், கதை, தாளக்கட்டுகள், ஜதிகள், வேட உடை, ஒப்பனை, பாத்திரங்களின் வருகை, அறிமுகம், ரஸவெளிப்பாடு, முடிவு, என்பவற்றின் அடிப்படையில் கூத்துக்கள் இருவகைப் படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் வடமோடி, தென்மோடி என்றும் வன்னியில் வடபாங்கு, தென்பாங்கு என்றும் மட்டக்களப்பில் வடமோடி, தென்மோடி என்றும் அழைக்கப்படுகின்றது.

இதன் சிறப்பு பற்றி பார்க்கும் போது வடமோடி, தென்மொடி கூத்துக்கள் என்பன இரு வகைப்பட்ட கதைகளைச் சொல்ல வல்லன. அதாவது வடமோடி கூத்து என்பதன் பொருள் யாதெனில் வீரமென பொருள்படும். அதாவது அரசர்கள் அல்லது மன்னர்களின் வீர சாகசங்களைக் கூறுவதாக இருக்கும். உதாரணமாக அவர்களின் போர், வரலாறு, புகழ் என்பவற்றை எடுத்தியம்பும் முகமாகக் காணப்படும். இதில் பயன்படுத்தப்படும் முடி, வாள் போன்றன பெரிதாகவும், பாரம் கூடியதாகவும் காணப்படும்.

இதே போன்று தென்மோடிக் கூத்து என்று பார்க்கும் போது, இதில் சிருங்கார உணர்வு மேலோங்கி காணப்படும். அதாவது காதல் கலந்த உணர்வினை அதிகம் வெளிப்படுத்தியிருக்கும்.

இளவரசன், இளவரசிக்கு இடையிலான காதல் மற்றும் இளவரசனின் பிரிவால் இளவரசி உடல் நலிவுற்றுக்கிடத்தல் என்பவற்றை குறிக்கும். இதில் பயன்படுத்தப்படுகின்ற வேட உடை, ஒப்பனை அனைத்தும் பாரம் குறைந்ததாக காணப்படும்.

> **1972ஆம் ஆண்டு கொழும்பில் Humber hall இல் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற அகில இலங்கை நாட்டுக்கூத்து போட்டியில் கோவலன் கூத்து சிறந்த கூத்தாக தெரிவு செய்யப்பட்டது**

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் காத்தவராயன் கூத்து பற்றி பார்ப்போமானால், இது யாழ்ப்பாணத்தில் சிறப்பாகவும் வட பிராந்தியத்தில் பொதுவாகவும் ஆடப்பட்டு வருகின்றது. மாரியம்மன் வழிபாட்டோடும், காத்தவராயன் வழிபாட்டோடும் தொடர்புடைய சடங்கின் வழிபாடாகக் கூத்துக்கள் காணப்படுகின்றது. இதனுடைய அரங்கமானது நீள் சதுரமான மேடையாகக் கொண்டு காணப்படும். திறந்த வெளியிலே உயர்த்தப்பட்ட மேடை, பின்புறம் ஒரு திரையும் கொண்டதாகக் காணப்படும். மூன்று பக்கங்களிலும் இருந்து பார்வையாளர்கள் பார்க்கக் கூடியதாக இருக்கும். சிவன், பார்வதி, காத்தவராயன் மாரியம்மன், பறையன், சின்னான் போன்ற பாத்திரங்கள் காணப்படும்.

மன்னாரில் ஆடப்படும் வடபங்கு, தென்பங்கு போன்ற கூத்துக்கள் பற்றி நோக்குவோமானால், மன்னார் நாடகங்களை "வாசகப்பா" என்று அழைக்கின்ற மரபு காணப்படுகிறது. வாசகப்பாவினை ஒரு இரா கதை எனவும், இரண்டாவது மற்றும் மூன்றாவது கதை எனவும் அழைக்கப்படுகிறது. வடபங்கில் கடவுளை வாழ்த்தும் தென்பாங்கில் வெண்பாவும், விருத்தங்களும் காணப்படும்.

வடபங்கில் கடவுளைப் பற்றி பாடுகின்ற கதைச் சுருக்கமானது காணப்படும். வடபாங்கில் பாடல் மேலோசையாகவும், தென்பாங்கில் வயலோசை உடையதாகவும் காணப்படும்.

யாழ்ப்பாண வடமராட்சி கூத்து பாரம்பரியங்களில் "நாட்டை" என்கின்ற கூத்து வடிவமும் காணப்படுகின்றது. வடமராட்சி சலவைத் தொழிலாளர்களால் இக்கூத்தானது ஆடப்படுகின்றது. இதனை புழுதிக்கூத்து எனவும் அழைப்பர். அரங்க அமைப்பானது முன்பக்கம் பார்ப்போரைக் கொண்டதான சமதரையாக காணப்படுகின்றது. மேலும் ஆரம்பக் காலங்களில் கூத்தானது வட்ட வடிவமாக மேடை உயர்த்தி வட்டக்களரி அமைப்பு முறையில் காணப்படுகிறது. வெளிச்சமூட்டுவதற்கு வாழைக்குற்றியின் கொப்பரா தேங்காய்க்குள் தேங்காய் எண்ணெய் ஊற்றப்பட்டு வெளிச்சமூட்டப்படும் இக்கூத்துக்கள் மாலை முதல் காலை வரை இடம்பெறும்.

மலையகத்தில் ஆடப்படும் கூத்துக்களின் சிறப்புகள் பற்றி நோக்கும்போது இங்கே காமன் கூத்து, அர்ஜுனன் தபசு, பொன்னர் சங்கர் போன்ற சிறப்பான கூத்து வகைகள் காணப்படுகின்றன. இவற்றுள் காமன் கூத்து என்பது மாசி மாதத்தில் ஆடப்படும் கூத்து வகையாகும்.

முல்லை மோடி எனும் கோவலன் கூத்தானது வன்னி பெருநில பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கே உரிய தனித்துவமான கூத்தாகும். இது கோவலன், கண்ணகியுடைய கதையைச் சித்தரித்துக் கூறுவதாக அமைகின்றது. இக்கூத்து இப்பிரதேசத்தைத் தவிர வேறெங்கும் இல்லை. ஆட்ட முறை, தாளக்கட்டு, ஆடை அணிகலன்கள், ஒப்பனை என அனைத்துமே தனித்துவமாக உள்ளது.

ஏனைய கூத்துக்களை விட அதிகமான தாளக்கட்டுக்களும் உள்ளன. ஒரு கூத்தில் பெரும்பாலும் 4-8 வரையான ஆடல் வகையும் மெட்டுக்களும் உள்ளன. ஆனால் முல்லை மோடியில் ஒரு பாத்திரத்திற்கு ஒரு தாளக்கட்டுக்களும் என அதிகமான தாளக்கட்டுக்களையும் மெட்டுக்களையும் கொண்டுள்ளது.

வடமாகாணத்திற்குரிய பிரபலமான சொத்து பேராசிரியர் முல்லைமணி என்பவரே இக்கூத்துக்கு "முல்லைமோடி" என்ற பெயரை கொண்டுவந்தவராவார். இக்கோவலன் கூத்தானது இற்றைக்கு நூறு வருடங்களுக்கு மேலாக ஆடப்பட்டு வருகின்றது. இக் கூத்தின் ஆரம்ப அண்ணாவியார் மாணிக்க அண்ணாவியார் ஆவார். ஆனால் இவர் இக் கூத்தை யாரிடம் கற்றார் என்ற தகவல் எவருக்குமே தெரியாமல் உள்ளது. இக் கூத்து முதன் முதலில் முல்லைத்தீவு கல்லம்பாடு என்ற இடத்தில் தான் முதன் முதலில் ஆடப்பட்டது. தற்போது இக்கூத்து 4வது தலைமுறையில் உள்ளது. இப்போது முல்லைத்தீவு முள்ளியவளையில் அதிக பிரபலம் பெற்ற இக்கூத்தின் ஆடல் வடிவங்கள் அப்பிரதேச மக்களுக்கு நன்றாகவே தெரிந்துள்ளது.

இக்கூத்து இன்று வரை எவ்வித நவீனமயமும் படுத்தப்படவில்லை வட்டக்களரியில் கூத்தானது ஆடப்படுகின்றது. விரதம் இருந்து கும்பம் வைத்து இக்கூத்து சடங்கு முறையில் ஆடப்படுகிறது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய திருவிழாவில் காப்புக் கட்டுதல் எனும் நிகழ்வுடன் இக்கூத்து ஆலயத்தில் தொடங்குகிறது. இக்கூத்து ஆடப்படாவிடில் அங்குள்ள மக்களுக்கு அம்மனின் கோபத்தால் பெரியம்மை, சின்னம்மை போன்ற நோய்கள் ஏற்படும் என்ற ஒரு சமய நம்பிக்கையும் காணப்படுகிறது. ஆரம்பக் காலத்தில் காணப்பட்ட ஆடை, அணிகலன்கள் இந்திய இராணுவத்தினரால் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. தற்போது ஆரம்ப ஆடையின் கற்பனையைக் கொண்டு தற்போதுள்ள அண்ணாவியாரால் ஆடை அணிகலன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கூத்து நடைபெறும் இடமாக வட்ட களரி காணப்படுகிறது. ஆனால், படச்சட்ட மேடையும் இக்கூத்து கொண்டு செல்லப்பட்டுள்ளது. படச்சட்ட மேடையில் இக்கூத்து நடைபெறும் போது மூன்று மணித்தியாலத்திற்குள் சுருக்கப்படுகிறது. இந்த கூத்தின் பக்க வாத்தியமாக மத்தளம், ஆர்மேனியம் போன்றன காணப்படுகின்றன. முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த அண்ணாவியார் எம். எஸ் மணியம் என்பவரால் இக் கலையானது வளர்க்கப்படுகிறது.

1972ஆம் ஆண்டு கொழும்பில் *Humber hall* இல் பேராசிரியர் வித்தியானந்தன் தலைமையில் அகில இலங்கை நாட்டுக்கூத்து போட்டியில் கோவலன் கூத்து சிறந்த கூத்தாக தெரிவு செய்யப்பட்டது. இக்கூத்தானது பேராதனை பல்கலைக்கழகம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் ஆடப்பட்டுள்ளது.

இந்தியாவின் திருமாவளவன், இன்குலாப் ஆகியோரின் முன்னிலையிலும் இக்கூத்து சிறந்த வரவேற்பு பெற்றுள்ளது. வற்றாப்பளை அம்மன் ஆலய திருவிழாவில் கும்பம் வைத்து கூத்து ஆடப்பட்ட பின்னரே வேறு இடங்களுக்கு இக்கூத்தை ஆட செல்வர். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும் முல்லை மோடி கதையும் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. ஆனால், சிலப்பதிகார கதை உண்மையோ அல்லது முல்லை மோடி கதை உண்மையோ என்பது ஆய்வுக்கு உரிய விடயம் ஆகும். உதாரணமாக சிலப்பதிகாரத்தில் பாண்டியன் தன் தவறை ஒப்புக்கொண்டு இறக்கின்றான் ஆனால், இந்த முல்லை மோடி கதையில் பாண்டிய மன்னன் கடைசிவரை தன் தவறை ஒப்புக் கொள்வதே இல்லை. இந்த கூத்தில் 39 பாத்திரங்கள் உள்ளன. சில பாத்திரங்கள் பரம்பரை பரம்பரையாக கடத்தப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவுக்கு ஏற்கனவே தங்களுடைய கூத்தின் தாளக்கட்டுகள் மற்றும் கால் அசைவுகளையும் மெட்டுக்களையும், பாடல்களையும் ஏனையோர் தங்களுடையது என கூறுவதாகவும் கூறுகின்றனர்.

## சமூகமும் பெருந்துணை புரிய வேண்டும்

யாழ். பல்கலைக்கழகம். நடனத்துறை, முதுநிலை விரிவுரையாளர், கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா கருத்துரைக்கையில்,

இவ்வாறு இலை மறை காயாக இருக்கின்ற முல்லை மோடி கூத்து போன்று எல்லா வகையான நாட்டார் கலை வடிவங்களும் எமது நாட்டிற்கே சிறப்பானவைகளாகும். நுணுக்கமான தாளக்கட்டுகள், சிறப்பான ஒப்பனைகள், வேட உடைகள், கலைஞர்களின் ஆளுமைத் திறன்கள் தேசிய ரீதியாகவோ அல்லது உலகளாவிய ரீதியாகவோ வெளிக் கொண்டுவரப்பட வேண்டும்.

அதன் முதற்கட்டமாக முல்லைத்தீவு பிரதேசத்தில் இருந்த இக்கூத்து வடிவத்தை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பல புத்திஜீவிகளின் மத்தியில் வெளிக்கொண்டு வருவதன் மூலம் பாரெங்கும் புகழ் பரப்பும் என்ற நல்லெண்ணத்தோடு அண்மையின் இரண்டாம் வருடக் கலாசார சுற்றுலாத்துறை மாணவர்களால் ஈழத்துப் பாரம்பரிய ஆற்றுகைகள் என்ற நிகழ்வில் மிகச் சிறப்பாக மேடை ஏற்றப்பட்டமை பாராட்டுக்குரிய விடயமாகும். இவ்வாறான மாணவர்களால் இக்கலைகள் நலிவடையாது ஊக்குவிக்கப்படுமென்பதுடன் சர்வதேச ரீதியில் இவை எடுத்துச் செல்லப்படும் நிலையில் உயர்வடையும் என்பதையும் அந்நிகழ்வு எடுத்துக்காட்டி உள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். இதனைப் போன்று எமது நாட்டில் உள்ள அண்ணாவியார்களிடம் காணப்படும் திறமைகளுக்கூடாக ஈழத்துக்கான பலவகை ஆடல் வகைகளையும் எடுத்துச் செல்வதற்கு ஊடகங்களும், மாணவர்களும், சமூகமும் பெருந்துணை புரிய வேண்டும்.



> **யாழ்ப்பாண - வடமராட்சி கூத்து பாரம்பரியங்களில் "நாட்டை" என்கின்ற கூத்து வடிவமும் காணப்படுகின்றது. இக்கூத்தானது வடமராட்சி சலவைத் தொழிலாளர்களால் ஆடப்படுகின்றது. இதனை புழுதிக்கூத்து என்றும் அழைப்பர். இக்கூத்தின் அரங்க அமைப்பானது முன்பக்கம் பார்ப்போரைக் கொண்டதான சமதரையாக காணப்படும்**

ஈழத்தில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, மலையகம் ஆகிய இடங்களில் எல்லாம் இம்மரபுக் கலை கூத்துகள் இன்றும் வழக்கில் உள்ளன. பிரதேசத்துக்குப் பிரதேசம் சில வேறுபாடுகள் காணப்பட்டாலும் இவை அனைத்தும் ஓரிடத்தில் உருவாகி பின்னர் ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் பரவின என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. இம்மரபு வழிக்கூத்துக்களே ஈழத்து நாடக மரபின் ஆரம்பமாகும். ஈழத்தில் 200க்கும் மேற்பட்ட மரபு வழி கூத்துக்கள் ஆடப்பட்டதாக அறிய முடிகின்றது. எனினும் அவற்றின் இன்று பாதியை மட்டுமே எங்களால் காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் கூத்துக்கள் இருந்துள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. பல கூத்துக்கள் ஆடப்பட்டிருந்தாலும் சில கூத்துக்கள் அச்சிலே நூலுருப் பெற்றுப் பதிப்பாக வெளிவந்துள்ளன.

எனவே, இதை அடிப்படையாகக் கொண்டு ஈழத்தினுடைய கூத்துகளில் சிறப்பு பற்றி நோக்கலாம். கூத்துக்களினுடைய மரபில் அச்சேறிய நூலாகக் கொள்ளப்படுகிறது. அராலியூர் முத்துக்குமார புலவரினால் 1776ஆம் ஆண்டளவில் எழுதப்பட்டதாகக் கூறப்படும். இந்த நாடகத்தை தென்மோடி கூத்தர்கள் தமது தாய் நூலாகக் கொண்டுள்ளனர்.

இது 1926ஆம் ஆண்டு அச்சுவேலி ஞானபிரகாசியார் அச்சியந்திரசாலையில் பிரசுரிக்கப்பட்டது. மு. வி ஆசீர்வாதத்தால் 1962இல் பதிப்பிக்கப்பட்ட யாழ்ப்பாண தென்மோடிக் கூத்தான "எஸ்தாக்கியர்" நாடகத்தை நோக்கும்போது மிகச்சிறந்த முறையில் சீர் பிரிக்கப்படும் நாடகப் பண்பினை நன்கு விளக்கி எழுதப்பட்டு இராக, தாளம் இடப்பட்டும், எழுத்துப் பிழைகள் இல்லாத சீரான அச்சுப்பதிப்பிலும் வெளிவந்தன.

ஈழத்துக் கூத்துக்களின் சிறப்பு வரிசையில் சுண்டுக்குழி புலவர் மரியாம்பிள்ளை அவர்களினால் 1934ஆம் ஆண்டளவில் இயற்றப்பட்ட "விஜய மனோகரன்" நாட்டுக் கூத்தானது சிறந்த இலக்கியத் தரத்தினை கொண்ட நாடகமாகும். அருமையான சொற்கள், சிறப்பான உவமைகள், எடுப்பான வர்ணனைகள், எதுகை மோனை சிறப்புக்கள், அணிகள் என்பன இந்தக் கூத்துக்கள் சிறப்புக் கட்டியம் கூறுகின்றன.

ஈழத்துக் கூத்து மரபின் தனித்துவமானதும், முல்லைத் தீவு பிரதேசத்தின் அடையாளமாகவும் திகழும் கூத்து மரபாகக் கோவலன் கூத்து அமைகின்றது. கண்ணகி அம்மன் சடங்கோடு தொடர்புடைய கூத்து பாரம்பரியம் பேணப்பட வேண்டிய மிக முக்கியமான கலைச்சொத்து ஆகும்.

இதன் ஆசிரியர் யார் என்பது பற்றியும் மூலப்பிரதிகள் எதுவும் கிடைக்கப்பெறாமல் வாய் வழியாகப் பேணி வந்தவற்றையும், சில கையெழுத்துப் பிரதிகளின் அடிப்படையில் ஆராய்ந்து பேராசிரியர் இரகுநாதன் அவர்கள் இதனைப் பதிப்பித்துள்ளார்.

இதேபோல பண்டிதமணி வி.சீ.கந்தையா அவர்களால் 1969இல் பதிப்பிக்கப்பட்ட வடமொழிக் கூத்து வகையாக இராமநாடகம் காணப்படுகிறது.

பல ஊர்களில் இக்கூத்தானது ஆடப்பட்டுள்ளது. சிறப்புகள் பற்றி நோக்கும்போது வி.சி.கந்தையா அவர்கள் ஆரைப்பற்றை, கழுதாவளை, காரைதீவு, பனங்காடு புளியந்தீவு என பல இடங்களிலும் உள்ள ஏட்டுப் பிரதிகளை எடுத்து அவற்றை ஒன்றிணைத்து நல்ல பிரதி எடுப்பதில் ஒத்துழைப்பு வழங்கினார்.

பிரதேசத்திற்குப் பிரதேசம் பல்வேறு வடிவங்களில் இக் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றது.

தற்காலத்தில் சில மருவிப்போனாலும் சில கூத்து வடிவங்கள் பாரம்பரியமாக சில பிரதேசங்களில் பேணப்பட்டு வருகின்றது.

ஆந்திரா

# சந்திரபாபு நாயுடுவுக்கு பிணை



ஆந்திர மாநில முன்னாள் முதல் அமைச்சரும், தெலுங்கு தேசம் கட்சி தலைவருமான சந்திரபாபு நாயுடு அவரது ஆட்சிக்காலத்தில் திறன் மேம்பாட்டு கழகத்தில் ஊழல் செய்ததாக கைது செய்யப்பட்டு ராஜமுந்திரி சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

இதற்கிடையே, விஜயவாடா ஊழல் ஒழிப்பு நீதிமன்ற நீதிபதிக்கு சிறையில் இருந்து சந்திரபாபு நாயுடு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "சிறையில் இருக்கும் எனக்கும், வெளியில் இருக்கும் என் குடும்பத்தினரின் உயிருக்கும் ஆபத்து உள்ளது. அதனால் ராஜமுந்திரி மத்திய சிறைக்கு உள்ளேயும், சிறைக்கு வெளியேயும் இசட் பிரிவு பாதுகாப்பு அளிக்கவேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

மேலும், இந்த வழக்கில் பிணை வழங்க கோரி சந்திரபாபு நாயுடு ஆந்திரா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், இந்த மனுவை விசாரித்த ஆந்திரா உயர் நீதிமன்றம் சந்திரபாபு நாயுடுவுக்கு 4 வார காலம் பிணை வழங்கியுள்ளது.

மத்திய அரசு முடிவுக்கு

# சோனியா கண்டனம்



இஸ்ரேல் இராணுவம் மற்றும் காசாவின் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் இடையே போர் நீடித்து வரும் சூழலில், உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ள அழைப்பு விடுத்து, ஐ.நா.பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா உள்ளிட்ட 45 நாடுகள் பங்கேற்கவில்லை.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி: "இஸ்ரேலுக்கு எதிரான வாக்கெடுப்பில் இந்தியா பங்கேற்காதது சரியல்ல. இது கண்டிக்கத்தக்கது. இஸ்ரேலுடன் சமாதானமாக இணைந்து பலஸ்தீனம் நடந்து கொள்ள வேண்டும் என்பது காங்கிரஸ் நிலைப்பாடு.

அங்கு இறையாண்மை கொண்ட சுதந்திரமான, சாத்தியமான மற்றும் பாதுகாப்பான தேசம் அமைய நேரடி பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். உடனடியாக அங்கு போரை நிறுத்த பல நாடுகளும் முயற்சி செய்ய வேண்டும்" என கூறியுள்ளார்.

கர்நாடகா

# தண்ணீரை திறக்க முடியாது



தமிழகத்திற்கு 15 நாட்களுக்கு விநாடிக்கு 2600 கன அடி நீர் திறந்துவிட வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு காவிரி நீர் ஒழுங்காற்று குழு பரிந்துரைத்துள்ளது. இந்நிலையில், கர்நாடகாவில் நீர்வரத்து பூஜ்ஜியமாக உள்ளதால் தண்ணீர் திறக்க முடியாத சூழல் உள்ளதாக அம்மாநில கர்நாடக நீர்வளத்துறை அமைச்சர் டி.கே. சிவக்குமார் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து மேலும், "தமிழகத்திற்கு தற்போது கர்நாடகா தண்ணீர் திறக்கும் நிலையில் இல்லை. கர்நாடகா அணைகளில் மொத்தமாக 551 டி.எம்.சி தண்ணீர் மட்டுமே உள்ளது. இது குடிநீருக்கு மட்டுமே போதுமானது" என்று கூறியுள்ளார்.

மேலும் தமிழகத்திற்கு 23 நாட்களுக்கு விநாடிக்கு 2,600 கன அடி நீர் திறந்துவிட காவிரி நீர் திறந்துவிட காவிரி நீர் ஒழுங்காற்று குழு பரிந்துரை செய்துள்ள நிலையில் மறுப்பு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான்

# ஆப்கான் அகதிகளை வெளியேற்றும் பாக்.



பாகிஸ்தானில் தங்கியிருக்கும் சுமார் 17 இலட்சம் ஆப்கான் அகதிகளை, ஆப்கானிஸ்தானுக்கு கட்டாயமாக அனுப்பும் பணிகளை பாகிஸ்தான் அரசு நவம்பர் முதலாம் திகதியன்று தொடங்க இருக்கிறது.

ரஷ்யாவில் தொடங்கி அமெரிக்கா வரை, ஆப்கானிஸ்தான் தேசம் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு ஆதிக்க நாடுகளால் அலைக்கழிக்கப்பட்டு வந்தது. உள்நாட்டுப் போர் காரணமாக இலட்சக்கணக்கானோர் அங்கிருந்து வெளியேறி அண்டை தேசமான பாகிஸ்தானில் அடைக்கலம் புகுந்தனர்.

ஆப்கானில் தலிபான்களின் கை ஓங்கத் தொடங்கியபோது, பாகிஸ்தானிலும் அதன் தாக்கத்தினாலான பயங்கரவாத குழுக்கள் அதிகரித்தன. அந்த குழுக்களால் பாகிஸ்தான் எல்லையிலும், உள்ளாகவும் பயங்கரவாத செயல்கள் அதிகரித்தன.

இந்த பயங்கரவாத குழுக்களில், ஆப்கானில் இருந்து அகதிகளாக வந்தவர்களே அதிகம் இடம்பெற்றிருப்பதாகப் பாகிஸ்தான் கண்டறிந்தது. எனவே, 'பாகிஸ்தான் தலிபன்' பயங்கரவாத குழுக்களை அடக்க, ஆப்கான் அகதிகளை ஆப்கானிஸ்தானுக்கே அனுப்ப முடிவு செய்தது.


அதன்படி, ஆப்கான் அகதிகள் பாகிஸ்தானிலிருந்து தாமாக வெளியேற ஒக்.31 காலக்கெடுவை முன்னதாக பாகிஸ்தான் அறிவித்தது. பாகிஸ்தான் உத்தரவுக்கு இணங்கி கணிசமானோர் ஆப்கானுக்குத் திரும்பினார்கள். ஆனால், சுமார் 2 இலட்சம் அகதிகள் மட்டுமே ஆப்கானுக்குத் திரும்பியிருப்பதாகவும், சுமார் 17 இலட்சம் பேர் உரிய ஆவணங்கள் இன்றி பாகிஸ்தானில் தங்கியிருப்பதாகவும் பாகிஸ்தான் கண்டறிந்தது.

இதனையடுத்து, அவர்கள் அனைவரையும் வலுக்கட்டாயமாகப் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றும் பணிகள் தொடங்கும் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

காசா

பிணைக்கைதிகளில்

# மூவரை விடுவித்தது ஹமாஸ்



பலஸ்தீனத்தின் காசா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 7ஆம் திகதி இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாக இஸ்ரேலும் காசா மீது போர் தொடுத்தது. இதில் இரு தரப்பினரும் சரமாரி ஏவுகணை தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை இரு தரப்பிலும் பத்தாயிரத்திற்க்கும் மேற்பட்டோர் இந்த போரில் பலியாகி உள்ளதாக கூறப்படுகிறது.

ஹமாசால் பிடிக்கப்பட்ட இஸ்ரேல் பிணைக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்க சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும் என இஸ்ரேல் பிரதமர் வலியுறுத்தினார். இந்நிலையில், மேலும் 3 இஸ்ரேல் பிணைக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவித்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படுவதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.




உலகக் கிண்ணம்:

# இலங்கையை வென்ற ஆப்கானிஸ்தான்

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், பூனேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை உடனான போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

இலங்கை: 241/10 (49.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 46 (60), குசல் மென்டிஸ் 39 (50), சதீர சமரவிக்கிரம 36 (40), மகேஷ் தீக்‌ஷன 29 (31) ஓட்டங்கள். பஸல்ஹக் பரூக்கி 4/34, முஜீப் உர் ரஹ்மான் 2/38, ரஷீட் கான் 1/50, அஸ்மதுலாஹ் ஓமர்ஸாய் 1/37)

ஆப்கானிஸ்தான்: 242/3 (45.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் ஆ.இ 73 (63), ரஹ்மத் ஷா 62 (74), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி ஆ.இ 58 (74), இப்ராஹிம் ஸட்ரான் 39 (57) ஓட்டங்கள். பந்துவீச்சு: டில்ஷான் மதுஷங்க 2/48, கசுன் ராஜித 1/48)

போட்டியின் நாயகன்: பஸல்ஹக் பரூக்கி

இந்நிலையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நியூசிலாந்தும் தென்னாபிரிக்காவும் மோதவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா:

# சம்பியனான களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம்



வீ.ரி. சகாதேவராஜா

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் சுவட்டு, மைதான நிகழ்வுகள், வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது 14 பிரதேச செயலக பிரிவிலிருந்தும் அதிகளவான இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் கலந்துகொண்ட நிகழ்வில் இம்முறையும் ஒட்டுமொத்த மெய்வல்லுனர் சம்பியனாக மண்முனை தென்எருவில்பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டது. ஒட்டுமொத்தமாக 33 முதலாமிடங்களையும், மூன்று இரண்டாமிடங்களையும், மூன்று மூன்றாமிடங்களையும் பெற்று சாதனை படைத்துள்ளது.

இதில் களுதாவளை ஜோர்டன் இளைஞர் கழகம் 21 முதலாமிடங்களையும், இரண்டு இரண்டாமிடங்களையும், இரண்டு மூன்றாமிடங்களையும் பெற்றது.

செட்டிபாளையம் பாடசாலை இளைஞர் கழகம் 12 முதலாமிடங்களையும் களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுல இளைஞர் கழகம் ஒரு இரண்டாமிடத்தையும், ஒரு மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர்

மேலும், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியினர் 4 X100 மீற்றர், 4 X400 மீற்றர் செட்டிபாளையம் மற்றும் களுதவளை பெண் வீராங்கனைகள் இணைந்து ஓடி வெற்றி வாகை சூடினர்.

மிகமுக்கியமாக உயரம் பாய்தல் நான்கு போட்டி நிகழ்வுகளிலும் மற்றும் ஆண்கள் நான்கு அஞ்சல் போட்டிகளிலும் களுதவளை வீரர்களே வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எட்டாவது தடவையாக

# பலூன் டோரை வென்ற மெஸ்ஸி

எட்டாவது தடவையாக பலூன் டோர் விருதை ஆர்ஜென்டீனாவின் லியனல் மெஸ்ஸி வென்றுள்ளார்.

கடந்தாண்டு உலகக் கிண்ணத்தை ஆர்ஜென்டீனா வெல்ல உதவியமையைத் தொடர்ந்தே இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான எர்லிங் ஹலான்டைத் தாண்டியே இவ்விருதை மெஸ்ஸி வென்றுள்ளார். விருதுப் பட்டியலில் மூன்றாமிடத்தில் பிரான்ஸின் கிலியான் மப்பே காணப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிறந்த கோல் பெறுபவராக ஹலான்ட் தெரிவாகியிருந்தார். கடந்த பருவகாலத்தில் சிற்றிக்காக 52 கோல்களைப் பெற்றிருந்தார்.

இதேவேளை, சிறந்த கோல் காப்பாளராக ஆர்ஜென்டீனாவின் எமிலியானோ மார்டினெஸ் தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில், சிறந்த கழகமான சிற்றி தெரிவாகியிருந்தது.



இதேவேளை, சிறந்த 21 வயதுக்குட்பட்ட வீரராக ஜூட் பெல்லிங்ஹாம் தெரிவாகியிருந்தார். கடந்த பருவகாலத்தில் 42 போட்டிகளில் 14 கோல்களை ஜேர்மனியக் கழகமான பொரூசியா டொட்டமுண்ட்டுக்காக பெல்லிங்ஹாம் பெற்றிருந்தார்.

# மீளாத் துயில் கொண்ட அங்கிள் பேர்சி



இலங்கை கிரிக்கெட் அணியின் தீவிர ஆதரவாளரான அங்கிள் பேர்சி எனதறியப்படும் பேர்சி அபேசேகர, தனது 87ஆவது வயதில் காலமானார்.

கடந்த 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தின்போது உலகளாவிய ரீதியில் பிரபலமான பேர்சி, குறிப்பாக இறுதிப் போட்டியில் இலங்கையின் வெற்றியைத் தொடர்ந்து லாகூர் மைதானத்தில் இலங்கைக் கொடியுடன் வலம் வந்தமையைத் தொடர்ந்து பரவலாக அறியப்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும் 50 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைப் போட்டிகளில் பேர்சி பிரசன்னமாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத் தொடர்:

# அரையிறுதியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

அஸ்ஹர் இப்றாஹிம்



யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடத்தும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பாடசாலைகளுக்கிடையிலான இளையோர் கூடைப்பந்தாட்ட தொடரில் 15 வயதுக்குட்பட்ட பெண்களில் அரையிறுதிப் போட்டிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தகுதி பெற்றுள்ளது.

காலிறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியை 26-10 என்ற புள்ளிகள் கணக்கில் உடுப்பிட்டி மகளிர் வென்றிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 நவம்பர் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.